பதிவுத்தபால்/ஒப்புதல் அட்டையுடன்

**தமிழ்நாடு பதிவுத்துறைத்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள், சென்னை.28 முன்னிலை: திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப.,**

**எண்.39049/கே1/2018-178, நாள். 14.11.2018.**

| | |
|---|---|
| பொருள் | நேரடி நியமனம் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுவின் CCSE தேர்வு II 2017-2018-நேரடி உதவியாளர் தெரிவுப் பட்டியல் – பணி நியமன ஆணை – வெளியிடுதல். |
| பார்வை | 1. அரசாணை எண்.527 மற்றும் 528, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள்.26.05.1981.<br>2. அரசாணை எண்.34, பொது (பணிகள் ஆர்) நாள்.12.01.1983.<br>3. அரசாணை (Ms) No.47, வணிகவரி மற்றும் பதிவு (M2) துறை நாள்.09.04.2010.<br>4. அரசாணை (D) No.183 வணிகவரி மற்றும் பதிவு (M2) துறை நாள்.31.05.2010.<br>5. அரசாணை (Ms) No.56 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள்.17.04.2012.<br>6. அரசாணை (Ms) No.64 வணிகவரி மற்றும் பதிவு (M2) துறை நாள்.13.06.2013.<br>7. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடித எண்.6006/PSD/D/2018, நாள்.30.10.2018. |

****

ஆணை:

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுவின் CCSE தேர்வு II (நேர்காணல் இல்லாத பதவிகளுக்கு) 2017-2018 – தேர்வின் மூலம் உதவியாளராகத் தேர்வு செய்யப்பட்டு பார்வை-7ல் காணும் தேர்வாணையக் கடிதத்தின் மூலம் பதிவுத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கீழ்கண்ட நபர் அவருக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள பதிவு மாவட்டத்தில் உதவியாளராக தற்காலிகமாக நியமனம் செய்யப்படுகிறார். இவருக்கு பணியிட மறுநியமன ஆணை சம்மந்தப்பட்ட மாவட்டப்பதிவாளர் / துணைப்பதிவுத்துறைத்தலைவரால் பிறப்பிக்கப்படும்.

| பெயர் மற்றும் முகவரி திரு/திருமதி/செல்வி | நியமனம் செய்யப்படும் பதிவு மாவட்டம்/ அலுவலகம் |
|---|---|
| S.காட்டுராஜா,<br>4/153, நடுத்தெரு,<br>குலசேகரன் கோட்டை கிராமம்,<br>திருவேங்கடம் போஸ்ட் & தாலுக்கா,<br>திருநெல்வேலி-627719. | பாளையங்கோட்டை. |

2. இந்த நியமனம் முற்றிலும் தற்காலிகமானது எனவும், சென்னை மற்றும் மதுரை உயர்நீதிமன்றங்களில் இது தொடர்பாக நிலுவையிலுள்ள நீதிப்பேராணை மனுக்களின் தீர்ப்புக்குட்பட்டது என்ற நிபந்தனையுடனும் வழங்கப்படுகிறது.

3. தேர்வாணையத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மேற்படி நபர் அளித்துள்ள விவரங்கள் தவறானவையென பின்னர் தெரியவந்தால், இவரது பணி நியமனம் உடனடியாக ரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

4. பணியிட நியமனம் வழங்கி சம்பந்தப்பட்ட மாவட்டப்பதிவாளர் / துணைப்பதிவுத்துறைத்தலைவர்களால் ஆணை பிறப்பிக்கப்படும் நாளிலிருந்து 15 நாட்களுக்குள் பணியில் சேரவேண்டும் எனவும், பணிசேர் காலம் குறித்து எவ்வித மனுவும் ஏற்கப்பட மாட்டாது எனவும், குறிப்பிட்ட காலவரையறைக்குள் பணியில் சேராவிடின் இவரது பெயர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையப் பட்டியலிலிருந்து நீக்க பரிந்துரை செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

5. இவர் பணியேற்கையில் உடற்தகுதி சான்று மற்றும் தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதி 38(b)(ii)ன் கீழான இணைப்பு IX C-ல் இனம் 13ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிணையப்பத்திரத்தை இரு பிணையதாரர்களின் கையொப்பத்துடன் தாக்கல் செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

6. இவர் பணியில் சேரும் நாள் முதல் ரூ.20600-65500 (Level -10) என்ற ஊதிய விகிதத்தில் ஊதியம் பெறத் தகுதியுடையவர் ஆவார். இவர் பணியில் சேர்ந்த இரண்டு ஆண்டுகளுக்குள் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் என்றும், இவர் பணியில் சேர்ந்தவுடன் பார்வை-6ல் கண்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 6 மாத காலத்திற்கு பயிற்சி பெறவேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

7. இவர் பள்ளி இறுதித் தேர்வில் தமிழை ஒரு பாடமாக படித்துள்ளாரா என்பதை உறுதி செய்துகொள்ள மாவட்டப்பதிவாளர் / துணைப்பதிவுத்துறைத்தலைவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். அவ்வாறு தமிழ்மொழி தேர்ச்சி பெறாதவர்கள் பணியில் சேர்ந்த இரண்டு ஆண்டுகளுக்குள் இரண்டாம் நிலை தமிழ் தேர்வில் (2nd Class Language (full) Test) தேர்ச்சி பெற வேண்டும் எனவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

8. பார்வை-7ல் காணும் தேர்வாணைய கடிதத்துடன் பெறப்பட்டுள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள வரிசை எண்ணுக்கும் முதுநிலைக்கும் தொடர்பில்லை. தேர்வாணையத்திடமிருந்து முதுநிலை குறித்து பட்டியல் பெறப்பட்ட பின்னரே தனியரின் முதுநிலை குறித்து முடிவு செய்யப்படும்.

9. இவருக்கு உடன் பணியிட நியமன ஆணை பிறப்பித்து அதனை பதிவஞ்சலில் அனுப்பி வைக்குமாறும், பார்வை 1&2ல் கண்ட அரசாணைகளின்படி பணியாளர் உடல் தகுதியுடையவராக இருக்கிறாரா என்பதற்கான உடற்தகுதி சான்றிதழைப் பெற்று உடற்தகுதி குறித்து திருப்தியடைந்த பின்னர் பணியில் சேர அனுமதிக்குமாறும் / மாற்றுத் திறனாளிகளைப் பொறுத்து, மாவட்ட மருத்துவக்

குழுவிடமிருந்து தகுந்த சான்றினைப் பெற்று பணியில் சேர அனுமதிக்குமாறும், இவர் பணியில் சேர்கையில், பத்தி 5ல் குறிப்பிடப்பட்டுள்ள பிணைய பத்திரத்தை தனியரிடமிருந்து பெறவும், பணியில் சேர்ந்தவுடன், இவரது வேலை வாய்ப்பக பதிவு அட்டையை பெற்று அதனை சம்பந்தப்பட்ட வேலை வாய்ப்பகத்திற்கு சரண் செய்திடவும் மாவட்டப்பதிவாளர் / துணைப்பதிவுத்துறைத்தலைவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. பணியிட மாற்றம் தொடர்பாக எவ்வித கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேலும் மேற்படி நபர் பணியில் சேர்ந்ததும் பணிசேர் அறிக்கையினை தவறாது அனுப்பி வைக்கவும் சம்மந்தப்பட்ட மாவட்டப்பதிவாளர் / துணைப்பதிவுத்துறைத்தலைவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஒம்/14.11.2018)
பதிவுத்துறைத்தலைவர்.

//ஆணையின்படி//

பதிவுத்துறைத் தலைவரின்
நேர்முக உதவியாளர் (பொது)

15/11

பெறுநர்:
S.காட்டுராஜா,
4/153, நடுத்தெரு,
குலசேகரன் கோட்டை கிராமம்,
திருவேங்கடம் போஸ்ட் & தாலுக்கா,
திருநெல்வேலி–627719.
(பதிவஞ்சலில் / ஒப்புகை அட்டையுடன்)

நகல்:

1) மாவட்டப்பதிவாளர், பாளையங்கோட்டை.
2) துணைப்பதிவுத்துறைத்தலைவர், திருநெல்வேலி.
3)இயக்குநர், பதிவுத்துறைத்தலைவர் பயிற்சி நிலையம், சென்னை–14.
4)தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–600 003.
5)பட்டியல் / நியமன ஆணைக்கோப்பு.